OS No.27/2013, நாள்: 13.11.2019

<u>வா.சா.1 ___ தண்டபாணி ஆஜர், 1 முதல் 6 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

நான் இந்த வழக்கை காட்டாகரம் கிராமம் புல எண்.274/7-க்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். அந்த புல எண்ணுக்கான புல வரைபடம் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதியில் முனியப்பன் நாயுடு மகன் வெங்கடப்ப நாயுடுவிற்கு பிதுராஜிதமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வெங்கடப்ப நாயுடுவின் மனைவி பெயர் பெரியபாப்பா என்றால் சரிதான். மேற்படி வெங்கடப்ப நாயுடு மற்றும் பெரியபாப்பா ஆகியோருக்கு சின்னசாமி, ராஜப்பன், ராஜம்மாள், கண்ணம்மாள், பாலகிருஷ்ணன் மற்றும் மாரியப்பன் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் மகன்தான் நான் என்றால் சரிதான். போடியம்மாள் என்பவர் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியின் மாமியார் என்றால் சரிதான். போடியம்மாளின் மகன்தான் முனியப்பநாயுடு என்றால் சரிதான். முனியப்பன் நாயுடுவின் மனைவிதான் 1ம் பிரதிவாதி சகுந்தலா என்றால் சரிதான். சகுந்தலா மற்றும் முனியப்பநாயுடுவிற்கு பிறந்தவர்கள் 2 முதல் 8 பிரதிவாதிகள் என்றால் சரிதான். என் தந்தை இறந்து 30 ஆண்டுகள் ஆகுமா என்றால் ஆகும். போடியம்மாளின் கணவர் இறந்து எத்தனை ஆண்டுகள் ஆகியிருக்கும் என்றால் சுமார் 20 ஆண்டுகள் ஆகியிருக்கும். போடியம்மாள் எனக்கு என்ன உறவு என்றால் பாட்டி ஆகவேண்டும். சகுந்தலா எனக்கு பெரியம்மா ஆக வேண்டும்.

வேண்டுகொளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்./-ஏ. செல்வகுமார்,பி.இ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.